வேலூர் மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்பு!

வேலூர், மே 18-

வேலூர் மாவட்ட தி.மு.க. கலந்துரையாடல் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்தது.

மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசுகி, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாநில தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் மண்டல பொறுப்பாளரும் நெடுஞ்சாலை துறை அமைச்சருமான எ.வ. வேலு கலந்து கொண்டு எதிர் வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளர்களை வெற்றி பெற செய்வது குறித்து செயல் திட்டங்கள் வகுப்பது, கழக நிர்வாகிகளின் செயல்பாடுகள் பி.எல்.ஏ.2, மற்றும் பி.எல்.சி. செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துக்கூறி சிறப்புரை ஆற்றினார். மற்றும் கொள்கை பரப்பு துணைச் செயலாளர்கள் டாக்டர் வி.எஸ்.விஜய், வேலூர் ரமேஷ், மாவட்ட துணைச்செயலாளர்கள் டாக்டர் பிரபாத்குமார், ஜி.எஸ். அரசு, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, குடியாத்தம் நகராட்சித் தலைவர் சவுந்தரராஜன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் வீ.தயாநிதி, லோகநாதன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் சி.எல்.ஞானசேகரன், எஸ்.தணிகாசலம், கே.கருணாகரன், வாலாஜா ஏ.கே.முருகன், கஜேந்திரன், சி.ரவி, பகுதிச் செயலாளர்கள் என்.பரமசிவம், ஜி. வன்னியராஜா, ஆர்.கே.ஜயப்பன், வி.ஜி.கே. சுந்தரவிஜி, பாலமுரளி கிருஷ்ணா, குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டேம்.டி.வெங்கடேசன், மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் பகுதிக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

குற்றாலம் பேரூர் கழக முன்னாள் பொருளாளர்

அண்ணாச்சி மேலப்பாவூர் பேச்சிமுத்து மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

நெல்லை, மே 18-

கழகத்தின் மீது தீவிர பற்று கொண்டவர் தலைவர் கலைஞர் அவர்கள், பேராசிரியர் அவர்கள், பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள், கழகத் தலைவர் அன்பு தளபதியார் அவர்கள் மீது தீராத பற்று கொண்டவர்.

தலைவர்கள் குற்றாலம் வருகிற போதெல்லாம் எதிர்க்கட்சியாக இருந்த காலகட்டங்களில் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து பணி செய்தவர் பேச்சிமுத்து அவர்கள்.

பேராசிரியர் அன்பழகனார் அவர்களை சந்திக்கிற பொழுதும் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களை சந்திக்கிற பொழுதும் நம்ம பேச்சி முத்து எப்படி இருக்கிறார் என்று கேட்பார்கள் அந்த அளவிற்கு அவர்களிடம் மிகவும் பரிச்சயமானவர் ஆனாலும் அவர்களிடம் தனக்கு தனது குடும்பத்திற்கோ என்று எந்த உதவியும் எதிர்பார்க்காமல் கழகப் பணி செய்தவர்.

ஒவ்வொரு நாளும் பகுத்தறிவு கொள்கைகள் திராவிட இயக்க வரலாறுகள் சம்பந்தப்பட்ட புத்தகங்களில் இருந்து தொகுப்புகளை எடுத்து கழகத்தின் மூத்த நிர்வாகிகளுக்கு எல்லாம் நேரில் வழங்குவதோடு தபாலிலும் திராவிட சுவடுகளை அனுப்பி வைக்கக் கூடியவர் பேச்சிமுத்து அவர்கள்.

தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்றவர் மருத்துவமன வாசலிலே தன்னுடைய உயிர் போகும் என்று நினைத்திருக்க மாட்டார்.

திராவிட இயக்க வரலாற்று குறிப்புகளை 100 ஆண்டு கால தொகுப்புகளை தொகுத்து வைத்திருக்கக்கூடிய ஒரு தீவிர திராவிட தொண்டன்.

தென்காசி திருநெல்வேலி மாவட்ட அமைப்புசாரா தொழிலாளர் சங்கத்தின் துணைத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

துணைத் தலைவர் பொறுப்பு என்று கூட பாராமல் அமைப்புச் சாரா தொழிலாளர்கள் அமைப்பில் ஆயிரக்கணக்கான உறுப்பினர்களை சேர்த்து அவர்களுக்கு உதவித்தொகை கல்வி உதவித்தொகை திருமண உதவித் தொகை போன்ற உதவிகள் கிடைக்க உதவிகரமாக இருந்து பணியாற்றியவர்.

அவரது மறைவு அவர்களது குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் கழகத்திற்கும் தொழிலாளர் வர்க்கத்திற்கும் மிகப்பெரிய இழப்பாகும்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

முல்லை வடிவேல்

மே 18 (1999)

கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து உறுப்பினர். செயற்குழு – பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர்.

தமிழக சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பு வகித்தவர். ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தின் முதல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து பதினாறு ஆண்டுகள் அப்பொறுப்பு வகித்தவர்.

வேலூர் கூட்டுறவு வங்கியின் தலைவராகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு, கருப்புக் கொடி, விலைவாசி உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

குற்றாலம் பேரூர்க் கழக முன்னாள் பொருளாளர்

மேலப்பாவூர் பேச்சிமுத்து மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே. 18-

குற்றாலம் பேரூக் கழக முன்னாள் பொருளாளர் மற்றும் ஒன்றிய பிரதிநிதி மேலப்பாவூர் பேச்சிமுத்து அவர்கள் நேற்று முன்தினம் (16.5.2025 - வெள்ளி) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த பேச்சிமுத்து அவர்கள் கழகத்தின் மீதும், முத்தமிழறிஞர் கலைஞர், தலைவர் தளபதி ஆகியோர் மீதும் தீராத பற்றுக்கொண்டவர்.

மறைவு செய்தி அறிந்த தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இர. செங்குட்டுவன்

மே 18 (2021)

இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கியவர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிளைச் செயலாளராகவும், சித்தாமூர் ஒன்றிய பொறுப்பாளராகவும், மாவட்ட கலை,இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கொளத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், சித்தாமூர் ஒன்றியக்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டம், ஈழத்தமிழர் ஆதரவு போராட்டம் என பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

56-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மே 18

அடக்கமும் அன்பும் நிறைந்த எனது ஆருயிர் தோழர். பண்பாளர், அன்பாளர், மதிப்பு மிக்கவர் என்றும் எந்நாளும், எல்லோராலும் போற்றப்படுபவர் இந்த மாநிலம் வாழ -மக்கள் வாழ தமது கடைசி மூச்சு வரை வாழ்ந்தவர் - முத்தமிழறிஞர் கலைஞர்.

காட்டு வளமே நாட்டின் வளம்-காட்டைக் காப்போம், நாட்டைக் காப்போம், மாணவர் முன்னேற்றம், கிராமங்கள் தோறும் பள்ளிகள் திறக்க வேண்டும் என முழங்கியவர் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவர். - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

தோற்றம் : 15.06.1918

மறைவு : 18.05.1969

முன்னாள் வேளாண்மை துறை அமைச்சர்

ஏ.கோவிந்தசாமி அவர்களின்

என்றும் உங்கள் வழியில் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் கரத்தை வலுப்படுத்துவோம்

முனைவர் க.பொன்முடி M.A.,Phd.,B.L.,MLA
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்

டாக்டர் S.ஜெகத்ரட்சகன் MP
கழக கொள்கை பரப்பு செயலாளர்

அன்னியூர் சிவா MLA
கழக விவசாயத் தொழிலாளர் அணி செயலாளர்

என்றும் தந்தையார் வழியில்

Dr.A.G.இளங்கோவன் M.D.,DM.,Cardiology Dr.சுமதி இளங்கோவன் M.D.,DM.,Cardiology

A.G.பத்மாவதி மருத்துவமனை, பாண்டிச்சேரி